**செ.வெ.எண்: 422** **நாள்: 27.07.2026**

## புதுக்கோட்டை மாவட்டம்

## பல்நோக்கு உதவியாளர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் வன்கொடுமையினால் பாதிக்கப்படும் பெண்களுக்கு மருத்துவ வசதி அளித்தல், சட்ட பூர்வ நடவடிக்கைக்கு உதவி செய்தல் மற்றும் மனரீதியான ஆலோசனைகள் வழங்கும் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் கீழ்காணும் பணியிடம் காலியாக உள்ளதால் இப்பணியிடத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. பதவியின் பெயர் - பல்நோக்கு உதவியாளர்
2. காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை - ஒன்று
3. தகுதி - 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
4. அனுபவம் - முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
5. ஊதியம் - மாதாந்திர தொகுப்பூதிய அடிப்படையில் ரூ.10,000/-

மேற்படி பல்நோக்கு உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான நபர்கள் தங்களது சுயவிபரங்களை 07.08.2026 அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், புதுக்கோட்டை என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.மேலும் காலக்கெடுவிற்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை நிராகரிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இது தொடர்பான மேலும் விபரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai